සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் - I, II	කාලය நேரம் Time	03 மணி

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

மேலதிக வாசிப்பு நேரம் பத்து நிமிடங்களாகும்	வினாத்தாளைப் வாசிப்பதற்கும், வினாக்களைத் தேர்ந்தெடுக்கவும், முன்னுரிமை அளிக்கும் வினாக்களைத் தீர்மானிக்கவும் கூடுதல் வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்தவும்.

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

01. கணினியின் கட்டுப்பாட்டு அலகின் பிரதான செயற்பாடு
    1. கணினிக்கு தரவு மற்றும் அறிவுறுத்தல்கள் உள்ளன என்பதனை காட்டுதல்
    2. இருமத் தரவுகளை உருவாக்குதல்
    3. முறைமையினுள் ஒத்திசை மற்றும் இலக்கமுறைச் செய்கைகளாக மொழிபெயர்த்தல்
    4. முறைமையை ஒழுங்கு முறையில் கட்டுப்படுத்தல்

02. தமிழ் மற்றும் சிங்களம் போன்ற மொழிகளிலும் கணினியில் பயன்படுத்துவதற்கான குறியீட்டு முறை
    1. EBCDIC 2. ASCII 3 BCD 4. Unicode

03. ICT யின் பிரயோகங்களில் Tele Monitoring எனும் சொல் பயன்படுத்தப்படுவது எத்துறையிலாகும்?
    1. கல்வி 2. விவசாயம் 3. வணிகம் 4. சுகாதாரம்

04. கணினித் தலைமுறைகளில் ஒன்றிணைந்த சுற்றுக்களின் பயன்பாடு பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    A. ஒன்றிணைந்த சுற்றின் பயன்பாடு காரணமாக கணினியின் செயற்றிறன் அதிகரித்ததோடு அளவும் குறைந்தது.
    B. ஒன்றிணைந்த சுற்றுக்கள் இரண்டாம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டது.
    C. ஒன்றிணைந்த சுற்றுக்கள் மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டது.

    இவற்றுள் சரியான கூற்று/கூற்றுக்கள்
    1. A, B 2. A, C 3. B 4. A, B, C

05. இரும எண் 111101 இற்குச் சமவலுவான பதினறும எண்
    1. 75_{16} 2. $3D_{16}$ 3. $3E_{16}$ 4. 61_{16}

06. அதிக அளவிலான தரவைக் கையாளும் ஒரு சேவையகத்தை நிறுவும் போது, சேமிப்பக திறன், வேகம் மற்றும் செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொள்வது அவசியம். பின்வருவனவற்றில் எது RAM, cache மற்றும் hard disk ஆகியவற்றுக்கு இடையே சரியான வரிசையை குறிக்கிறது?
    1. Cache memory > RAM > Hard Disk (கொள்ளளவின் அடிப்படையில்)
    2. Hard Disk > RAM > Cache memory(விலையின் அடிப்படையில்)
    3. Cache memory> RAM > Hard Disk (கதியின் அடிப்படையில்)
    4. RAM > Hard Disk > Cache memory (கொள்ளளவின் அடிப்படையில்)

Past Papers Wiki

07. கணினியில் உள்ள கோப்புக்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

- படிமக் கோப்புகள் - 500MB
- காணொளி – 1GB
- ஆவணம் - 100KB

இவற்றைத் தேக்கிவைப்பதற்குத் தேவையான குறைந்த கொள்ளளவையுடைய பளிச்சீட்டுச் செலுத்தி பின்வருவனவற்றுள் எது?

1. 1GB 2. 2GB 4. 4GB 4. 8GB

08. மாணவர் மையப்படுத்தப்பட்ட சூட்டிகை வகுப்பறை (SLSC) திட்டத்தின் கீழ், அனைத்து சூட்டிகை சாதனங்களும் (Smart Board, Tablets மற்றும் சேவையகங்கள்) திறமையான கற்றல் தளத்துடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் தொடர்பான பின்வரும் அறிக்கைகளைக் கவனிக்க

A. ஒரு வகுப்பறை அல்லது பாடசாலை கட்டிடம் போன்ற வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதிக்குள் தரவு பரிமாற்றத்திற்கு, இடத்துரி வலையமைப்பு (LAN) மிகவும் பொருத்தமானதகும்

B. இரண்டு சாதனங்களுக்கு இடையில் நேரடியாக தரவுகளை பரிமாற்றக் கொள்ளக்கூடிய முறையிலான வலையமைப்பு peer to peer வலையமைப்பாகும்

C. இந்தத் திட்டத்தை தென் மாகாண கற்றல் முகாமைத் தொகுதியுடன் (WISDOM CLOUD LMS) இணைக்கும்போது, பெருநகர்ப் பரப்பு (MAN) அல்லது பெரும்பரப்பு (WAN) போன்ற பரந்த வலையமைப்புகளைப் பயன்படுத்துவது அவசியமாக இருக்கலாம்.

இக்கூற்றுக்களுள் சரியானவை?

1. A 2. A, B 3. B, C 4. A, B ,C

09. வன்வட்டை தர்க்கரீதியாகப் பிரித்தல் பயன்பாட்டு மென்பொருளின் எவ்வகைக்கு உதாரணமாகும்

1. வழுவைப் பராமரித்தல் 2. தேக்க முகாமைத்துவம்
3. நினைவக முகாமைத்துவம் 4. பயனர் இடைமுகம்

10. ஒரு கணினியில் உள்ள ஒரு தர்க்க வாயிலுக்கு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் வெளியீடு "1" ஆகுவதற்கு

A இன் உள்ளீடு – 1
B இன் உள்ளீடு – 1
C இன் உள்ளீடு – 0

இந்த நிலைமையை எந்த பூலியன் கோவை துல்லியமாக வகைகுறிக்கின்றது?

1. $A.B + \bar{C}$ 2. $A + B + \bar{C}$ 3. $A.B.\bar{C}$ 4. $A.B.C$

11. கணினியில் கோப்பு முகாமைத்துவத்தில் கோப்பு உறையிலுள்ள கோப்பு ஒன்றை நீக்குவதற்கு பயன்படுத்தப்படுவது.

1. Rename 2. Copy 3. Delete 4. Move

12. மெய்நிலை அட்டவணை ஒன்றில் NOR தர்க்க வாயிலின் உள்ளீடு A, B ஆகவும் அதன் வெளியீடு 1 ஆகவும் இருப்பின் A, B இன் பெறுமானங்கள் முறையே

1. A = 1, B = 0 2. A = 0, B = 1 3. A = 1, B = 1 4. A = 0, B = 0

13. பாதுகாப்பு முறைமை ஒன்றில் கதவு திறந்திருத்தலிற்கான உணரி (D) அல்லது யன்னல் திறந்திருத்தலிற்கான உணரி (W) ஆகியவை செயலூக்கமடைந்தால் (1) எச்சரிக்கை முறைமை (A) தொழிற்படும். இச்செயற்பாட்டிற்குப் பொருத்தமான தர்க்க வாயில்

1. NOT 2. AND 3. OR 4. NAND

14. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளின் ஒரு ஆவணத்தின் வசனத்தை வெட்டி வேறொரு இடத்திற்கு ஒட்டுவதற்கான குறுக்கு வழிச்சாவிகள் முறையே

1. Ctrl + C, Ctrl + V 2. Ctrl + C, Ctrl + X 3. Ctrl + X, Ctrl + V 4. Ctrl + A, Ctrl + P

கீழுள்ள விரிதாள் மென்பொருளை அவதானித்து 15 தொடக்கம் 17 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

y=mx+C வடிவிலான வரைபை வரைவதற்கு மாணவன் ஒருவன் m=3 , C=5 ஆகிய பெறுமாணங்களை வழங்கி y இற்கான பெறுமானங்களை துணிய வேண்டியுள்ளது.

	A	B
1	x	y
2	1	
3	2	
4	3	
5	m	3
6	c	5

15. இவ்வாறான செயற்பாட்டின் போது சார்பற்ற கலமுகவரிகளைப் பயன்படுத்துவதின் அனுகூலம் யாது?
    1. வேகமாக கணித்தல்களை மேற்கொள்ளலாம்
    2. கல உள்ளடக்கம் மட்டுமே நகலெடுக்கப்படும்.
    3. சூத்திரத்தின் நிரல் மற்றும் நிரை இயல்பாகவே மாற்றமடையும்
    4. பிரதி பண்ணும் போது கலத்திலுள்ள பெறுமானங்கள் மாற்றமடையாமல் இருக்கும்

16. Y=3X+5 எனும் சமன்பாட்டிற்கு B2 கலத்தில் உள்ள சூத்திரத்தை B3 தொடக்கம் B4 வரை பிரதியிட்டால் y இற்கான பெறுமானம் பெறப்படும். இதற்காக B2 இல் உள்ளிட வேண்டிய சூத்திரம் யாது?
    1. =(B5*A2)+B6 2. =($B$5*A2)+$B$6 3. =(B$5 * A$2) + B$6 4. =(B2* A5)+B3

17. வினா 16 இன் சரியான சூத்திரத்தை கலம் B4 இற்கு பிரதியிட்டால் கலம் B4 இல் அச்சூத்திரம் எவ்வாறு காட்சியளிக்கும்?
    1. =($B$5*A4)+B6 2. =($B$5 * A3)+$B$6 3. =($B$5*A4)+$B$6 4. =(B4*A4)+B6

18. நிகழ்த்துகை ஒன்றை தயாரிக்கும்போது, பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் படங்கள் மற்றும் பாடம் (text) திரையில் எவ்வாறு தோன்றும் என்பதை எந்த அம்சம் கட்டுப்படுத்துகிறது?
    1. வில்லை மாறும் காட்சி (Slide Transitions) 2. அசைவூட்டம் (Custom Animations)
    3. வில்லை தளக்கோலம் (Slide Layout) 4. நிகழ்த்துகை மென்பொருள் (Presentation Software)

19. 100 மாணவர்களுக்கு ஒரே கடிதத்தை அனுப்பவேண்டியுள்ளது. அதில் மாணவனின் பெயர், புள்ளி, முகவரி ஆகியவற்றை மாத்திரம் மாற்ற வேண்டும். சொல்முறை வழிப்படுத்தலில் இச்செயற்பாட்டுக்கு பொருத்தமான பகுதி எது?
    1. Find and Replace 2. Mail Merge
    3. Document Templates 4. Styles and Formatting

20. கணினி செய்நிரலாக்க மொழியில், பயனரால் வரையறுக்கப்பட்ட பெயர்களுக்கு என்ன சொல் பயன்படுத்தப்படுகிறது?
    1. ஒதுக்குசெய் சொல் 2. மாறி 3. அடையாளங்காணி 4. மாறிலி

21. ஒரு செய்நிரலில் துணை செய்நிரல்களைப் பயன்படுத்துவதன் முக்கிய நன்மை என்ன?
    1. விரைவாக செய்நிரலை செயல்படுத்துவதற்கு
    2. குறியீட்டை மீண்டும் பயன்படுத்தக்கூடிய தன்மை
    3. நினைவக பயன்பாடு குறைவடைதல்
    4. தரவு வகைகளை எளிதாக நிர்வகித்தல்

22. கீழுள்ள பஸ்கால் கூற்றின் வருவிளைவு யாது?
    = 15 div 4 + 3 * 2;
    1. 9.75 2. 10.0 3. 9 4. 12

23. ஒருபரிமாண அணியில் 5 ஆவது மூலகத்தை அணுகுவதற்கான சுட்டி எது?
    1. Array[5] 2. Array[6] 3. Array[4] 4. Array[1]

24. கீழுள்ள போலிக்குறிமுயின் வெளியீடு யாது?

```
i = 1
total = 0
While i <= 3
  total = total + i
  i = i + 1
End While
Output total
```

    1. 1
    2. 3
    3. 6
    4. 10

25. பாய்ச்சட் கோட்டுப்படத்தை போலிக் குறிமுறையாக மாற்றும் போது வைர வடிவம் பிரதிபலிப்பது
1. தொடரி 2. தெரிவு 3. மீள்செயல் 4. முறைவழியாக்கம்

26. ஓர் எண் இரட்டையா அல்லது ஒற்றையா எனப் பரீட்சிப்பதற்குப் பயன்படுத்தப்படும் எண்கணித வினைக்குறி எது?
1. + , - 2. * , / 3. MOD , = 4. DIV , >

கீழுள்ள தரவுத்தள அட்டவணைகளை அவதானித்து 27 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

MAPS_CURRICULUM

Unit_ID	Subject	ICT_Tool_Type	CMap_Status
6SCI01	Science	Simulation	Mapped
6MTH03	Mathematics	Interactive Board	Mapped
6SNH02	Sinhala	Multimedia	Unmapped
6HIS01	History	Presentation	Mapped

CLASS_SCHEDULE

Schedule_ID	Unit_ID	Day	Time_Slot
SC001	6SCI01	Monday	8:30 – 9:10
SC002	6MTH03	Monday	9:10 – 9:50
SC003	6SNH02	Tuesday	10:10 – 10:50
SC004	6HIS01	Wednesday	8:30 – 9:10

TEACHER_USAGE

Teacher_ID	Teacher_Name	Room_No	Available_Start_Time
T001	A. Perera	R01	11:30
T002	K. Silva	R02	08:30
T003	N. Samarathna	R01	14:00
T004	D. Alwis	R03	10:10

27. CLASS_SCHEDULE அட்டவணையில் Unit_ID ஆனது அந்நியச் சாவியாக பயன்படுவதற்கான பிரதான காரணம் யாது?
1. அதனை கலப்புச் சாவியாக பயன்படுத்த முடிதல்
2. MAPS_CURRICULUM அட்டவணையில் Unit_ID ஆனது தனித்துவமாக அடையாளப்படுத்தக் கூடிய புலமாகக் காணப்படுவதால்
3. அப்புலத்தின் பதிவுகள் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதால்
4. ஒவ்வொரு நாளும் இற்றைப்படுத்தப்படுவதால்.

28. பாடத்திட்ட மேப்பிங் நிலை (CMap_Status) "வரைபடமற்றது" என உள்ள அனைத்து பாட அலகுகளையும் அடையாளம் காண்பது அவசியம். MAPS_CURRICULUM அட்டவணையில் வினவல்களை உருவாக்கும்போது CMap_Status புலத்திற்கு என்ன அளவுகோல்களைப் பயன்படுத்த வேண்டும்?
1. ="Mapped" 2. Not "Mapped" 3. ="6SNH02" 4. ="Unmapped"

29. MAPS_CURRICULUM அட்டவணையில் இல்லாத CLASS_SCHEDULE அட்டவணையில் '8COM02' என்ற புதிய Unit_ID ஐச் சேர்க்க முயற்சித்தால், தரவுத்தள மென்பொருள் ஏன் **பிழையைக்** காண்பிக்கும்?
(1) '8COM02' எழுத்துக்கள் மற்றும் எண்கள் இரண்டையும் கொண்டிருப்பதால்.
(2) அட்டவணைகளுக்கு இடையிலான உறவை அது மீறுவதால்.
(3) CLASS_SCHEDULE அட்டவணையின் முதன்மைச் சாவி ஒரு கலப்பு சாவி என்பதால்.
(4) தரம் 6-க்கு சொந்தமில்லாத அலகுகளைச் செருக இது அனுமதிக்காது என்பதால்.

30. சூட்டிகை வகுப்பறையை (Smart Classroom) முன்பதிவு செய்ய ஆசிரியர்கள் தரவை நிகழ்நிலையில் எளிதாக உள்ளிட அனுமதிக்க எந்த தரவுத்தள கூறு உருவாக்கப்பட வேண்டும்?

1. வினவல் 2. அறிக்கை 3. அட்டவணை 4. படிமம்

தற்போது உருவாக்கத்தில் உள்ள Smart Assist முறைமை பாடசாலையின் Smart classroom இற்கு உபகரணங்களை வழங்குதல் மற்றும் திரும்பப் பெறுதல் ஆகியவற்றை நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது HTML மற்றும் CMS (உள்ளடக்க முகாமைத்துவ முறைமை) பயன்படுத்தி கட்டமைக்கப்படும்.

31 முதல் 33 வரையிலான கேள்விகளுக்கு பதிலளிக்க மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்துக.

31. Smart Assist அமைப்பில் மாணவர் உள்நுழைந்த பிறகு உபகரண வழங்கும் வலை பக்கத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் வித்தியாசமான தகவலைக் காட்டுகிறது. இந்த நோக்கத்திற்காக எந்த வகையான வலைப்பக்கத்தைப் பயன்படுத்த வேண்டும்?

1. நிலைத்த இணையத் தளம் (Static Web Page)
2. இயங்கு நிலை இணைத்தளம் (Dynamic web page)
3. CMS உடன் தொடர்புபட்ட பக்கம்
4. Hyper Text Document

32. Smart Assist வலைத்தளத்தின் பிரதான பக்கத்தில், வலைமேலோடி Tab இல் "Smart Assist Home" என்ற தலைப்பு காட்சிப்படுத்தப்பட வேண்டும். இந்த பணிக்கு எந்த HTML ஒட்டை (Tag) பயன்படுத்த வேண்டும்?

1. <body> 2. <h1> 3. <title> 4. <head>

33. Smart Assist முறைமையானது மாணவர்கள் உபகரணங்களை வழங்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றி குறிப்பிட வேண்டும். இந்த வழிமுறைகளை ஒரு வலைப்பக்கத்தில் எண்ணிடப்பட்ட பட்டியலாகக் காண்பிக்கப் பயன்படுத்த வேண்டிய சரியான HTML ஒட்டுக்கள் யாவை?

1. , <li> 2. <dl> , <dt> 3. , <li> 4. <tr> , <td>

34. https://www.islandcricket.lk/ URL இல் பின்வருவனவற்றில் எது 'http' என்று விவரிக்கப்பட்டுள்ளது?

1. ஆள்களப் பெயர் 2. சேவை 3. கோப்பு 4. நெறிமுறை

35. முறைமை விருத்தி வாழ்க்கை வட்டத்தில் (SDLC) தேவைகள இனங்காணல் மற்றும் தீர்வினை வடிவமைத்தல் கட்டங்களுக்கு இடையேயான முக்கிய தொடர்புடைமை யாது?

1. தேவைகளை அடையாளம் காண்பதற்கு முன்பு வடிவமைப்பு செய்யப்படுகிறது.
2. வடிவமைத்தலுக்கு அடுத்தாக முறைமையை சோதித்தல் செய்யப்படுகிறது.
3. அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் வடிவமைப்பு செய்யப்படுகிறது.
4. வடிவமைப்பு நிலைக்கு முன்பு பராமரிப்பு செய்யப்படுகிறது.

36. மின்னஞ்சல் செய்தியை அனுப்பும்போது BCC (Blind Carbon Copy) புலத்தைப் பயன்படுத்துவதன் நோக்கம் யாது?

1. பெறுநருக்கு ஒரு நகலை அனுப்பவதற்கு
2. அனுப்புநரின் முகவரியை மறைப்பதற்கு
3. பெறுநரின் முகவரியை மற்ற பெறுநர்களிடமிருந்து மறைப்பதற்கு
4. பெறுநரை பதிலளிக்க கட்டாயப்படுத்துவதற்கு

37. ஒரு பரவல் வரைபை (Raster graphic) பெரிதாக்கப்படும்போது அதன் தரம் ஏன் குறைகிறது?

1. இது படமூலத்தை அடிப்படையாகக் கொண்டது
2. இது கணித சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டது
3. இது இழப்பு சுருக்கத்தைப் பயன்படுத்துகிறது
4. இது அடுக்குகளைப் பயன்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது

PAST PAPERS WIKI

38. மின்னணுக் கழிவுகளை(Electronic Waste) பாதுகாப்பாக அகற்றுவது தொடர்பாக பின்வரும் விடயம்(கள்) எது சரியானது?

A. தற்போதைய மின்னணு உபகரணங்களை முறையாக பராமரிப்பதன் மூலம் தேவையற்ற வாங்குதல்களை குறைத்தல்.

B. பழுதுபார்க்க முடியாத உபகரணங்களை மீள்சுழற்சி செய்யும் நிறுவகத்திற்கு வழங்குதல்.

C. பழைய ஆனால் இயக்க நிலையில் உள்ள உபகரணங்களை அழிக்காமல் நன்கொடையாக வழங்கல்

மேலே உள்ள கூற்றுகளில் எது சரியானது?

1. A 2. A, C 3. B, C 4. A, B, C

39. பணித்திறனியல் மற்றும் உடல்நலப் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளும்போது, கணினி பயனர்கள் அனுபவிக்கக்கூடிய மீள்வரும் தகைப்புக் காயத்திற்கு (RSI) ஒரு உதாரணம்

1. நீரிழிவு நோய் 2. கண் சோர்வு 3. இதய நோய் 4. தலைவலி

40. ஒலி விளைவுகளை கணினியில் வடிவமைக்கவும் அவற்றைத் தொகுக்கவும் பயன்படுத்த **முடியாத** மென்பொருள்

1. Audacity 2. Power sound editor 3. Vectorian Giotto 4. Mp3 Directcut

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்


නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

பகுதி II
முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01.


1. 159_{10} எனும் பதின்ம எண்ணை
   a. இரும எண்ணாக மாற்றுக.
   b. பதினறும எண்ணாக மாற்றுக.

2. கீழுள்ள பாய்ச்சட் கோட்டுப்படத்தை அவதானித்து விடை எழுமுக.



   a. பாய்ச்சட் கோட்டுப் படத்தினால் காட்டப்பட்டுள்ள தர்க்கம் எது?
   b. (Is Number > 0) இது எவ்வகையான கட்டமைப்பாகும் (Control Structure) ?

3. கீழுள்ள தர்க்கச்சுற்றை அவதானித்து விடை எழுதுக.



   1. A=1 , B=0 ஆயின் வருவிளைவு C இன் பெறுமதி யாது?
   2. A=0 , B=1 ஆயின் வருவிளைவு F இன் பெறுமதி யாது?

4. பாடசாலை ஆய்வுகூடத்தில் உள்ள உபகரணங்கள் பற்றிய தரவைச் சேமிக்க ஒரு அட்டவணையை உருவாக்க வேண்டும்.
   i. இந்த அட்டவணையின் முதன்மைச் சாவிக்கு பொருத்தமான புலப் பெயரைக் குறிப்பிடுக.
   ii. அம் முதன்மைச் சாவிப் புலத்திற்கு மிகவும் பொருத்தமான தரவு வகை எது?

5. a. ICT இன் மூலம் சுகாதாரத் துறை அடையும் இரு அனுகூலங்களை குறிப்பிடுக.
   b. தரவு மற்றும் தகவல்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தடுக்க கணினியின் பௌதீக பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சாதனத்தை எழுதுக.

6. A, B, C, D, E என பெயரிடப்பட்ட ஐந்து கணினிகளும், ஒரு அச்சுப்பொறியும் (இவை நேரடியாக கணினி வலையமைப்புடன் இணைக்கப்பட வேண்டும்) இணைத்து ஒரு வலையமைப்பை உருவாக்க வேண்டும். ஒரு ஆளி, ஒரு வழிப்படுத்தி மற்றும் போதுமான எண்ணிக்கையிலான வடங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொருத்தமான சாதனங்களை மட்டும் பயன்படுத்தி, ஒரு உடு வடிவ வலையமைப்பாக்கலைக் (Topology) கொண்ட ஒரு வரைபடத்தை வரைக.

7. கணினி பணிசெயல் முறைமை தொடர்பான பின்வரும் கூற்றுகள் சரியா அல்லது பிழையா என்பதைக் குறிப்பிடுக. (உதாரணம் : A – சரி)

A	வன்பொருள் மற்றும் ஏனைய மென்பொருட்களை முகாமை செய்வது பணிசெயல் முறைமையின் பிரதான தொழிலாகும்
B	ஒவ்வொரு பணிசெயல் முறைமையும் ஒரே முறையைப் பயன்படுத்தியே கணினி நினைவகத்தில் தரவைச் சேமிக்கிறது.
C	அனைத்து வகையான பணிசெயல் முறைமைகளும் பயனர் நட்பு இடைமுகத்தை வழங்கும்
D	வட்டு ஒருங்கமைத்தல் என்பது ஒவ்வொரு இயக்க முறைமையிலும் செய்யப்பட வேண்டிய ஒரு பொதுவான பணியாகும்.

8. சில வடிவமைப்பு மாற்றங்களுடன் கூடிய சொல்முறை வழிப்படுத்தலின் மூலம் உருவாக்கப்பட்ட ஆவணத்தின் ஒரு பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது.

   முன்னர்: on the insert tab, the galleries include items that are designed to coordinate with the overall look of your document.

   பின்னர்: On the insert tab, the galleries include items that are **designed to coordinate** with the *overall look* of your document.

   மேலே காட்டப்பட்டுள்ள மாற்றங்களைச் செய்ய சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் உள்ள எந்த வடிவமைப்பு கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்?

9. மின்னஞ்சல் அனுப்புவது தொடர்பான வசனங்களை கொடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து தெரிவு செய்க. (Example : A - To)
   a. பெறுநரின் மின்னஞ்சல் முகவரியைக் காட்டுகிறது.
   b. நகல்களைப் பெறுபவர்களின் மின்னஞ்சல் முகவரிகளைக் காட்டுகிறது.
   c. அனைத்து பெறுநர்களும் மின்னஞ்சலை வேறு யார் பெற்றார்கள் என்பதைப் பார்க்க அனுமதிக்கிறது.
   d. பெறப்படும் மின்னஞ்சல்களைப் சேமிக்கிறது.
   e. தேவையற்ற மின்னஞ்சல்களைச் சேமிக்கிறது.
   f. நீக்கப்பட்ட மின்னஞ்சல்களைச் சேமிக்கிறது.

   பட்டியல் : {To, Inbox, Trash, Center, Attachment, Spam, Drafts, Send, Sent, BCC, CC}

10. a, b என்பன முறைமையா என்பதைக் குறிப்பிட்டு அதன் உள்ளீடு, முறைவழியாக்கம், வெளியீடு என்பவற்றை எழுதுக.
    a. மனித குறுதிச் சுற்றோட்டத் தொகுதி
    b. மின் மோட்டார்

02. a. பின்வரும் பத்தியில் உள்ள சூழ்நிலையை அவதானித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

மருத்துவமனையின் செயற்திறனை அதிகரிக்கும் நோக்கில், தற்போதைய கைம்முறை நோயாளி பதிவு முறைமை, மருத்துவ பதிவு செயலாக்க முறைமை ஆகியவற்றை கணினி அடிப்படையிலான முறைமையாக (computer-based system) நிறுவ இலங்கை மருத்துவமனைகள் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இந்தப் பணி ஹெல்த்டெக் சொல்யூஷன்ஸ் என்ற மென்பொருள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆகஸ்ட் 10, 2024 அன்று அந்த நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள், சமன் மற்றும் பிரியங்கா மருத்துவமனையின் செயற்பாடுகளைக் கவனித்தனர், பின்னர் மருத்துவமனை மேலாளர் மற்றும் தலைமை மருத்துவ அதிகாரியுடன் ஒரு நேர்காணலை நடத்தினர். முறைமையுடன் தொடர்புடைய

பல்வேறு நிலையில் உள்ள ஊழியர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் வினாத்தாள்களைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டன.

அனைத்து தகவல்களையும் சேகரித்த பிறகு, ருவான் தீர்வினை வடிவமைத்தல் பணியைத் தொடங்கினார். அவரது வடிவமைப்பின் படி, நிலக்ஷி என்ற நபர் மென்பொருளை உருவாக்கினார், மேலும் கசுன் அலகு சோதனையையும் செய்தார். அந்தப் பணிகள் முடிந்த பிறகு மருத்துவமனையின் ஒரு ஊழியர் ஏற்றுக்கொள்ளும் சோதனையை மேற்கொள்ள அழைக்கப்பட்டார், மேலும் இம் முறைமை மே 5, 2025 அன்று நிறுவனத்தில் நிறுவப்பட்டது.

புதிய முறைமை ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படாது, மாறாக மருத்துவமனையின் காலிக் கிளையில் முதலில் நிறுவப்பட்டு பயன்படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. அதேநேரத்தில், சஞ்சீவா என்ற நபர் எழுந்த பிரச்சினைகளைத் தீர்க்க உதவினார். சுமார் மூன்று மாத காலத்திற்குப் பிறகு, சாமுதிதா என்ற நபர் வந்து முறைமையில் சிறிய மாற்றங்களைச் செய்தார்.

1. புதிய கணினி அடிப்படையிலான தகவல் முறைமை, கைம்முறை தகவல் முறைமையை விட மிகவும் சாதகமாக இருப்பதற்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக.
2. சமன் மற்றும் பிரியங்காவால் நிகழ்த்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் வினாத்தாள்களைப் பயன்படுத்துவதன் ஒரு நன்மையை எழுதுக.
3. முறைமை வடிவமைப்பின் போது ருவான் செய்திருக்கக்கூடிய இரண்டு பணிகளை எழுதுக.
4. மருத்துவமனையில் இம் முறைமையை நிறுவ பயன்படுத்தப்படும் முறை எது?
5. இம் முறைமைக்கு எவ்வகையான முறைமை விருத்தி மாதிரியம் மிகவும் பொருத்தமானதாக இருக்கும்? நீங்கள் ஏன் அம் மாதிரியைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

b. பின்வரும் அட்டவணை *முறைமை விருத்தி ஆயுள் வட்டப்* படிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளைக் காட்டுகிறது. A, B, C, D ஆகிய வெற்றிடங்களை நிரப்புக.

	படிமுறை	**செயற்பாடு**
	A	முறைமையின் தேவைகளை இனங்காண அவதானிப்பு, நேர்காணல்கள் மற்றும் வினாத்தாள்களைப் பயன்படுத்துதல்.
	குறிமுறைப் படுத்தல்	கணினி மொழியைப் பயன்படுத்தி மென்பொருளை உருவாக்குதல்.
	B	அலகுச் சோதனை
	அமுல்படுத்தல்	C
	D	சில மாதங்களுக்குப் பிறகு அமைப்பில் சில சிறிய மாற்றங்களைச் செய்தல்.

03. தென் மாகாணத்தில் கல்வியை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தின் கீழ், இடைநிலைப் பாடசாலைகளுக்கான டிஜிட்டல் உபகரணங்களை வழங்க பின்வரும் விரிதாள் மென்பொருளின் ஒரு பகுதி தயாரிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில், ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின்படி பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் ICT LAB மேசைமேல் கணினிகள் மற்றும் SLSC Tabs, (Tablet) ஆகியவற்றின் விநியோகம் மதிப்பிடப்பட்டு அதற்கேற்ப கணக்கிடப்பட்டுள்ளது.

	A	B	C	D	E	F	G
1	Number of Students in Class	Number of Smart Class/ICT Lab (N)	ICT Lab Desktops (N)	SLSC Tabs (N)	ICT Lab Desktop Cost (LKR in Mn)	SLSC Tabs Cost (LKR in Mn)	Total Package Cost (LKR in Mn)
2	40	242	9,680	9,680	1,936.00	726	2,662.00
3	35	29	1,015	1,015	203.00	76.125	279.13
4	30	35	1,050	1,050	210.00	78.75	288.75
5	25	54	1,350	1,350	270.00	101.25	371.25
6	20	72	1,440	1,440	288.00	108	396.00
7	15	83	1,245	1,245	249.00	93.375	342.38
8	10	181	1,810	1,810	362.00	135.75	497.75
9	Total	696	17,590	17,590	3,518.00	1319.25	4,837.25
10	Cost per Desktop	0.2	(LKR in Mn)				
11	Cost per Tab	0.075	(LKR in Mn)				

- ICT LAB மேசைமேல் கணினி ஒன்றின் விலை விலை ரூ. 200,000 ஆகும், இது கலம் B10 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- SLSC TAB ஒன்றின் விலை ரூ. 75,000 ஆகும், இது கலம் B11 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கலம் E2 இல் உள்ள ICT LAB மேசைமேல் கணினிகளின் மொத்த செலவைக் கணக்கிடுவதற்கான இரண்டு சாத்தியமான சூத்திரங்கள் (நிரல் E) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. =C2*$B$10 2. =C2*B10

a. மேலே உள்ள இரண்டு சூத்திரங்களில், கலம் E2 இற்குப் பொருத்தமான சூத்திரம் எது?
b. மேலே உள்ள இரண்டு சூத்திரங்களில், கலம E2 இல் உள்ளிட்ட சூத்திரத்தை கலம் E3 இலிருந்து கலம் E8 இற்கு நகலெடுக்கும்போது எந்த சூத்திரம் சரியான முடிவைக் கொடுக்கும்?

2. ICT LAB மற்றும் SLSC களில் உள்ள மொத்த கணினிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட C9 மற்றும் D9 கலங்களில் உள்ளிட வேண்டிய சூத்திரம் யாது?

3. கலம் G10 இல் குறைந்தபட்ச மொத்த தொகுப்பு செலவைக் (Total Package Cost) காண்பதற்கான சூத்திரத்தை எழுதுக.

4. மேசைமேல் கணினிகளின் விலையுடன் ஒப்பிடும்போது டெப்பின் (Tab) சதவீத விலையை கலம் D10 இல் காண்பதற்கு கலம் D10 இல் உள்ளிட வேண்டிய சூத்திரம் என்ன?
சதவீதம் = (SLSC Tab cost/ICT Lab Desktop Cost)*100

5.
a. கலம் A2 இல் உள்ள தரவின் தரவு வகை என்ன?
b. F2 முதல் G8 வரை உள்ள நாணய மதிப்புகளை மில்லியன் ரூபாய்களில் இரண்டு தசமதானங்களுக்கு மட்டுப்படுத்த விரிதாள் மென்பொருளில் காணப்படும் கருவி எது?

04.

1. HTML ஐப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வலைப்பக்கத்தின் ஒரு பகுதியும் (Figure 1) அதற்கான HTML ஒட்டுக்களும் (Figure 2) கீழே காட்டப்பட்டுள்ளன. 1 முதல் 10 வரை பெயரிடப்பட்ட சில விடுபட்ட ஒட்டுக்களின் (Tag) பெயர்களை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக

பட்டியல் : {img, li, body, td, h1, table, a, head, th, ul, html, ol}

Artificial Intelligence in Education



Artificial intelligence in education refers to the use of computer systems that can perform tasks typically requiring human intelligence to enhance learning experiences, streamline administrative processes, and support educators.
Here are some advantages and disadvantages of Artificial Intelligence in Education

Advantages	Disadvantages
Personalized learning	Lack of human interaction
24/7 availability	Privacy concerns
Automated grading	Bias in algorithms
Data-driven insights	Dependence on technology

Key roles of AI in education

- Task automation
- Content creation
- Improved engagement
- Enhanced accessibility

For more information. Artificial Intelligence in education

Figure 1

```
<html>
     <①>
        <title>Artificial Intelligence</title>
     </①>
      <②>
        <③><center>Artificial Intelligence in Education</center></③>
        <center><④ src="C:\Users\DELL\Desktop\image.png" width="350"
        height="200 alt="AI"></center>
        <p>Artificial intelligence in education refers to the use of computer
        systems that can perform tasks typically requiring human intelligence
        to enhance learning experiences, streamline administrative processes,
        and support educators.</p>
        <p>Here are some advantages and disadvantages of Artificial
        Intelligence in Education</p>
        <⑤ align="center" border="2">
            <tr><⑥>Advantages</⑥><⑥>Disadvantages</⑥></tr>
             <tr><⑦>Personalized learning</⑦><⑦>Lack of human
             interaction</⑦></tr>
            <tr><⑦>24/7 availability</⑦><⑦>Privacy concerns</⑦></tr>
            <tr><⑦>Automated grading</⑦><⑦>Bias in algorithms</⑦></tr>
            <tr><⑦>Data-driven insights</⑦><⑦>Dependence on
        technology</⑦></tr>
        </⑤>
        <h2>Key roles of AI in education</h2>
        <⑧>
            <⑨>Task automation</⑨>
            <⑨>Content creation</⑨>
            <⑨>Improved engagement</⑨>
            <⑨>Enhanced accessibility</⑨>
        </⑧>
        <p>For more information: <⑩
        href="https://knowledgeworks.org/resources">Artificial Intelligence
        in education </⑩></p>
     </②>
</html>
```

Figure 2

2. நிரல் A இற்கு பொருத்தமான பணிகளை நிரல் B இலிருந்து தெரிவு செய்க. (உதாரணம் : 1 – Q)

A		B	
1.	இயங்குநிலை இணையத்தளம்	Q	வலைத்தளங்களை பதிவேற்றும் மென்பொருள.
2.	Kompozer	R	இணையத்தளத்தின் உள்ளடக்கம் மாற்றமடையும்
3.	Joomla	S	திறந்த ஆதாரமூல இணைய படைப்பாக்ககருவிகள்
4.	Filezilla	T	திறந்த ஆதாரமூல உள்ளடக்க முகாமைத்துவ முறைமை மென்பொருள்

3. இன்று, மக்களின் அன்றாடப் பணிகளை எளிதாக்குவதற்கு இணையம் ஒரு அவசியமான கருவியாக மாறிவிட்டது. இணையத்தால் வழங்கப்படும் இரண்டு சேவைகளை எழுதுக.

4. கீழே அடைப்பினுள் உள்ள சொற்களிலிருந்து A – D இற்கு பொருத்தமான சொற்களை தெரிவு செய்க. (உதாரணம் : A – Google Chrome)

Label	பணி
A	தேடற்பொறி
B	வழு ஏற்படும்போது தெரிவித்தலும் செய்திக் கட்டுப்பாடும்
C	IP முகவரிப் பரிமாற்றல் கட்டுப்பாடு
D	மின்னஞ்சல்களைப் பரிமாறுதலும் சேமித்துவைப்பதும் சேவைப் பயநரின் கணினிக்கு வழங்குதலும்.


{Google Chrome, Google, TCP/IP, DNS Server, ICMP, Web Server, Mail Server, Web Address}

05. a. அமல்ஜா தனது கணினியில் பல்வேறு பாடங்களுக்கான தனது கற்றல் தொடர்பான PDF கோப்புகள் மற்றும் வீடியோ கோப்புகளை சேமித்து வைத்துள்ளார். கூடுதலாக, பாடல்களைக் கேட்பதில் அவர் ஆர்வமுள்ளதால் ஏராளமான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடல்களை MP3 கோப்புகளாக தனது கணினியில் சேமித்து வைத்துள்ளார். இந்தக் கோப்புகள் அனைத்தையும் அவர் ஒரே கோப்புறையில் சேமித்து வைத்துள்ளார்.

1. ஒரு கோப்பு சேமிக்கப்படும் போது, கோப்பு பெயர் மற்றும் இருப்பிடத்தைத் தவிர, பணிசெயல் முறைமை மூலம் கோப்பு தொடர்பாக பேணப்படும் மேலதிக விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

2. அமல்ஜா இம்முறை G.C. E சாதாரண தர பரீட்சைக்குத் தயாராகும் ஒரு மாணவி. இருப்பினும், அனைத்து கோப்புகளும் ஒரே கோப்புறையில் சேமிக்கப்படுவதால், தேவையான குறிப்புகள் மற்றும் வீடியோக்களை விரைவாகக் கண்டுபிடிப்பது அவளுக்கு கடினமாக உள்ளது. கணினியில் சேமிக்கப்பட்டுள்ள அனைத்து பாடல்களையும் அவளது விருப்பங்களின் அடிப்படையில் மொழி வாரியாக ஒழுங்கமைக்க வேண்டும். இதற்கு ஒரு தீர்வாக பின்வரும் கோப்புறை அமைப்பு முன்மொழியப்பட்டுள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து A - F லேபிள்களுக்கு பொருத்தமான கோப்புறை பெயர்களை எழுதுக
கோப்புறை பெயர்கள்: பாடல்கள், கல்வி, தமிழ், குறிப்புகள், ஆங்கிலம், பாடங்கள்



b. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் குறிக்கின்றன. பட்டியலிலிருந்து இடைவெளிக்குகு மிகவும் பொருத்தமான சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

i. நிசால், ஒரு தொழில்முறை சமையல்காரர், ஒரு புதிய உணவு செய்முறையை உருவாக்கினார், அதற்கான உரிமையைப் பெற, அவர் ஒரு .....A..... பெற வேண்டும்.

ii. சந்துனி நீண்ட காலமாக தனது கவிதைகளை பேஸ்புக்கில் வெளியிட்டு வருகிறார். ஒரு நாள், வேறொருவர் தனது கவிதைகளில் ஒன்றை தனது சொந்த பெயரில் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டிருப்பதைக் கண்டார். இது ஒரு .....B..... ஆகுத.

iii. வழங்கப்படும் மின் வலுவின் வோல்ற்றளவைக் கட்டுப்படுத்தி கணினிகள் மற்றும் பிற மின் சாதனங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, ...C..... ஐப் பயன்படுத்தலாம்.

iv. கணினி வலையமைப்புகளை .....D..... ஐப் பயன்படுத்துவதன் மூலம் அங்கீகரிக்கப்படாத அணுகலில் இருந்து பாதுகாக்க முடியும்.

v. தரவுகள், மென்பொருள், வன்பொருள் ஆகியவற்றிற்குத் தீங்குபயக்கும் .....E….. வகைகள் ஒவ்வொன்றும் நிறைவேற்றத்தக்க கோப்புகளுடன்(Executable files) தொகுதிக்குள்ளே புகுகின்றன.

vi. இலக்கமுறை அறிவுடைமையை ஏற்படுத்துவதனூடாகவும், நிதித் தடைகளை நீக்குவதினூடாகவும், வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும், ...F..... ஐ உருவாக்க முடியும்.

vii. திசாலி தனது அன்றாட வாழ்க்கையில் எதிர்கொண்ட பிரச்சினைகள் மற்றும் தனது .....G..... இல் அவற்றை எவ்வாறு வெற்றிகரமாக சமாளித்தார் என்பது பற்றி எழுதுகிறார்.

viii. மற்றவர்களின் புகைப்படங்களை அனுமதியின்றி இணையத்தில் பதிவேற்றுவது ஒரு .....H..... ஆகும்..

(நுண்ணறிவுச் சொத்தை களவாடல், கடவுச்சொற்கள், ஆக்கவுரிமை, சைபர் குற்றங்கள், இலக்கமுறை இடைவெளி, கணினி நச்சு நிரலகள், எழுத்துத் திருட்டு, தடைப்படா மின்வலு (UPS), பிளொக் (Blog), கணினி வேர்ம்கள், தீச்சுவர், எழுச்சிப் பாதுகாப்பி, சமூக ஊடகங்கள், இலக்கமுறை பாலம்)

Past Papers Wiki

06. தெண் மாகாண கல்வித் திணைக்களம், Southern Smart Innovation Platform (SSIP-2025) எனும் வடிவமைப்புப் போட்டிக்கான முழுச்செயற்பாட்டையும் (மாணவர் பதிவு முதல் மதிப்பீடு வரை) திறம்பட நிர்வகிக்க தரவுத்தளம் ஒன்றை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

Student Table

Adm_No	Full_Name	Gender	Grade	School_Census_ID
S001	Amal Senanayaka	Male	11	8173
S002	Chandrika Kumari	Female	10	8200
S003	Suresh Malinga	Male	11	8173
S004	Nishanthi Perera	Female	10	8501

Events Table

Event_Code	Event_Name	Category
SSIP-LS-PS	Presentation Software	10-11
SSIP-LS-RI	Robotics/IoT	10-11
SSIP-J-GD	Game Development	6-9
SSIP-US-WD	Web Design and Development	12-13

Submissions Table

Reg_ID	Adm_No	Event_Code	Submission_Date
TANG-PS-01	S001	SSIP-LS-PS	2025-07-28
TANG-RI-02	S001	SSIP-LS-RI	2025-08-01
TANG-WD-03	S002	SSIP-US-WD	2025-07-25
TANG-PS-04	S004	SSIP-LS-PS	2025-08-05

1.
   a. STUDENTS அட்டவணையில் Adm_No புலம் முதன்மைச் சாவியாக ஏன் பயன்படுத்தப்படுகிறது?
   b. SUBMISSIONS இல் உள்ள Adm_No மற்றும் Event_Code புலங்கள் STUDENTS மற்றும் EVENTS அட்டவணைகளுடன் உறவுகளை உருவாக்குகின்றன. இவை எந்த வகையான சாவிக்கு உதாரணமாகும்?
   c. EVENTS அட்டவணையில் உள்ள Event Code புலத்திற்கு பயன்படுத்தக்கூடிய பொருத்தமான தரவு வகை எது?

2.
   a. போட்டியின் முடிவில், STUDENTS மற்றும் SUBMISSIONS அட்டவணைகளின் அடிப்படையில் கல்விப் பணிப்பாளருக்கு வெற்றியாளர்களின் முழுமையான பட்டியலை (Name, School, Event) வழங்குவதற்கு மிகவும் பொருத்தமான தரவுத்தள இலக்குப்பொருள் (Object) எது?
   b. மாணவர்கள் சமர்ப்பித்த தரவை நிகழ்நிலையில் உள்ளிடுவதற்கான பயனர் இடைமுகத்தை வடிவமைக்க எந்த தரவுத்தளப் இலக்குப் பொருளைப் பயன்படுத்த வேண்டும்?
   c. SUBMISSIONS அட்டவணையின் முதன்மைச் சாவி மற்றும் அந்நியச் சாவி என்பவற்றைக் குறிப்பிடுக.

3. SUBMISSIONS அட்டவணையில் உள்ள தரவின் அடிப்படையில், 2025-07-30 க்கு முன்பு தங்கள் படைப்புகளைச் சமர்ப்பித்த மாணவர்களின் Reg_ID ஐ மட்டுமே காட்டும் ஒரு அறிக்கை தேவைப்படுகிறது.
   a. இந்த வினவல் செயல்பாட்டில் Submission date புலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மிகவும் பொருத்தமான நியதி எது?

07. கல்வி அமைச்சு 100 பாடசாலைகளுக்கு 100 சூட்டிகைப் பலகைகளை (Smart Board) விநியோகிக்க திட்டமிட்டுள்ளது. பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும்போது பின்பற்ற வேண்டிய 4 முக்கிய நியதிகள் கீழே தரப்பட்டுள்ளன. கணினிச் செய்நிரல் மூலம் இந்த நியதிகளைச் சரிபார்க்க நெறிமுறை ஒன்றை வடிவமைக்க வேண்டும்.

A. அப்பாடசாலை 1C பிரிவைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.


B. கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு நன்கொடைகளின் கீழ் அப்பாடசாலை ஸ்மார்ட் போர்டுகளைப் பெற்றிருக்கக் கூடாது.

C. பாடசாலையில் இணைய வசதிகள் இருக்க வேண்டும்.

D. பாடசாலையில் ஒரு ICT ஆசிரியர் அல்லது ICT அறிவு உள்ள ஆசிரியர் இருக்க வேண்டும்.

A,B,C,D ஆகிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் பாடசாலைகளை மட்டுமே ஸ்மார்ட் போர்டை நன்கொடையாக வழங்க தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த தர்க்கத்தைக் குறிக்கும் சரியான பூலியன் கோவை எது?

கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சட் கோட்டுப்படத்துடன் தொடர்புடைய போலிக் குறிமுறையை எழுதுக.



PAST PAPERS WIKI

***

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank